ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த பெருமாள் திருமொழி

# 1 – இருளிரிய

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

# 1 – இருளிரிய

‡ இருள் இரியச் சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி ⋆
இனத் துத்தி அணி பணம் ஆயிரங்கள் ஆர்ந்த ⋆
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும் ⋆
அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை மேவி ⋆
திருவரங்கப் பெரு நகருள் தெண்ணீர்ப் பொன்னி ⋆
திரைக் கையால் அடி வருடப் பள்ளி கொள்ளும் ⋆
கரு மணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு ⋆
என் கண் இணைகள் என்று கொலோ களிக்கும் நாளே ! ‖ **1.1** ‖

‡ வாயோர் ஈர் ஐஞ்ஞூறு துதங்கள் ஆர்ந்த ⋆
வளை உடம்பின் அழல் நாகம் உமிழ்ந்த செந்தீ ⋆
வீயாத மலர்ச் சென்னி விதானமே போல் ⋆
மேன்மேலும் மிக எங்கும் பரந்த தன் கீழ் ⋆
காயாம்பூ மலர்ப் பிறங்கல் அன்ன மாலைக் ⋆
கடி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
மாயோனை மணத்தூணே பற்றி நின்று ⋆
என் வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே ! ‖ **1.2** ‖

எம்மாண்பின் அயன் நான்கு நாவினாலும் ⋆
எடுத்தேத்தி ஈர் இரண்டு முகமும் கொண்டு ⋆
எம்மாடும் எழில் கண்கள் எட்டினோடும் தொழுதேத்தி ⋆
இனிதிறைஞ்ச நின்ற ⋆
செம் பொன் அம்மான் தன் மலர்க் கமலக் கொப்பூழ் தோன்ற ⋆

அணி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
அம்மான் தன் அடி இணைக் கீழ் அலர்கள் இட்டு ⋆
அங்கடியவரோடென்று கொலோ அணுகும் நாளே ! ‖ **1.3** ‖

மாவினை வாய் பிளந்துகந்த மாலை ⋆
வேலை வண்ணனை என் கண்ணனை வன் குன்றம் ஏந்தி ⋆
ஆவினை அன்றுய்யக் கொண்ட ஆயர் ஏற்றை ⋆
அமரர்கள் தந் தலைவனை அந்தமிழின் இன்பப்பாவினை ⋆
அவ் வடமொழியைப் பற்றற்றார்கள் ⋆
பயில் அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
கோவினை நாவுற வழுத்தி எந்தன் கைகள் ⋆
கொய்ம் மலர் தூய் என்று கொலோ கூப்பும் நாளே ! ‖ **1.4** ‖

இணை இல்லா இன்னிசை யாழ் கெழுமி ⋆
இன்பத் தும்புருவும் நாரதனும் இறைஞ்சி ஏத்த ⋆
துணை இல்லாத் தொன் மறை நூல் தோத்திரத்தால் ⋆
தொன் மலர்க் கண் அயன் வணங்கி ஓவாதேத்த ⋆
மணி மாட மாளிகைகள் மல்கு செல்வ ⋆
மதில் அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
மணிவண்ணன் அம்மானைக் கண்டு கொண்டு ⋆
என் மலர்ச் சென்னி என்று கொலோ வணங்கும் நாளே ! ‖ **1.5** ‖

அளி மலர் மேல் அயன் அரன் இந்திரனோடு ⋆
ஏனை அமரர்கள் தம் குழுவும் அரம்பையரும் மற்றும் ⋆
தெளி மதி சேர் முனிவர்கள் தம் குழுவும் உந்தித் ⋆
திசை திசையில் மலர் தூவிச் சென்று சேரும் ⋆
களி மலர் சேர் பொழில் அரங்கத்துரகம் ஏறிக் ⋆
கண் வளரும் கடல் வண்ணர் கமலக் கண்ணும் ⋆

ஒளி மதி சேர் திரு முகமும் கண்டு கொண்டு ⋆
என் உள்ளம் மிக என்று கொலோ உருகும் நாளே ! ॥ **1.6** ॥

மறம் திகழும் மனம் ஒழித்து வஞ்ச மாற்றி ⋆
ஐம் புலன்கள் அடக்கி இடர்ப் பாரத் துன்பம் துறந்து ⋆
இரு முப்பொழுதேத்தி எல்லை இல்லாத் தொன்னெறிக் கண் ⋆
நிலை நின்ற தொண்டரான ⋆
அறம் திகழும் மனத்தவர் தம் கதியைப் பொன்னி ⋆
அணி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
நிறம் திகழும் மாயோனைக் கண்டென் கண்கள் ⋆
நீர் மல்க என்று கொலோ நிற்கும் நாளே ! ॥ **1.7** ॥

கோல் ஆர்ந்த நெடும் சார்ங்கம் கூனற் சங்கம் ⋆
கொலை ஆழி கொடுந் தண்டு கொற்ற ஒள் வாள் ⋆
கால் ஆர்ந்த கதிக் கருடன் என்னும் ⋆
வென்றிக் கடும் பறவை இவை அனைத்தும் புறம் சூழ் காப்ப ⋆
சேல் ஆர்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த ⋆
திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
மாலோனைக் கண்டின்பக் கலவி எய்தி ⋆
வல் வினையேன் என்று கொலோ வாழும் நாளே ! ॥ **1.8** ॥

தூராத மனக் காதல் தொண்டர் தங்கள் குழாம் குழுமித் ⋆
திருப் புகழ்கள் பலவும் பாடி ⋆
ஆராத மனக் களிப்போடழுத கண்ணீர் மழை சோர ⋆
நினைந்துருகி ஏத்தி ⋆
நாளும் சீரார்ந்த முழவோசை பரவை காட்டும் ⋆
திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆

போர் ஆழி அம்மானைக் கண்டு துள்ளிப் ⋆
பூதலத்தில் என்று கொலோ புரளும் நாளே ! ॥ **1.9** ॥

‡ வன் பெரு வானகம் உய்ய அமரர் உய்ய மண் உய்ய ⋆
மண் உலகில் மனிசர் உய்ய ⋆
துன்ப மிகு துயர் அகல அயர்வொன்றில்லாச் சுகம் வளர ⋆
அக மகிழும் தொண்டர் வாழ ⋆
அன்பொடு தென் திசை நோக்கிப் பள்ளி கொள்ளும் ⋆
அணி அரங்கன் திருமுற்றத்தடியார் தங்கள் ⋆
இன்ப மிகு பெருங்குழுவு கண்டு ⋆
யானும் இசைந்துடனே என்று கொலோ இருக்கும் நாளே ! ॥ **1.10** ॥

‡ திடர் விளங்கு கரைப் பொன்னி நடுவு பாட்டுத் ⋆
திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
கடல் விளங்கு கருமேனி அம்மான் தன்னைக் ⋆
கண்ணாரக் கண்டுகக்கும் காதல் தன்னால் ⋆
குடை விளங்கு விறல் தானைக் கொற்ற ஒள் வாள் ⋆
கூடலர் கோன் கொடைக் குலசேகரன் சொற் செய்த ⋆
நடை விளங்கு தமிழ் மாலை பத்தும் வல்லார் ⋆
நலந் திகழ் நாரணன் அடிக்கீழ் நண்ணுவாரே ॥ **1.11** ॥

அடிவரவு — இருள் வாய் எம்மாண்பின் மாவினை இணை அளி மறம் கோல் தூராத வன்பெரு திடர் தேட்டு

இருளிரிய முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்